**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 26 செப்டெம்பர் 2017

Nestlé
Good Food, Good Life

# நெஸ்லே நிறுவனம் அதன் கொப்பரைத் தேய்காய் உற்பத்திகளுக்கு ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில் 'அதிக பெறுமதி சேர் ஏற்றுமதியாளர்' என்ற விருதை வென்றுள்ளது

*உள்நாட்டில் வாழ்வாதாரத்திற்கு தொடர்ந்தும் ஆதரவளித்து வருவதுடன், இலங்கையின் வெளிநாட்டு வருவாயையும் அதிகரிக்கச்செய்கின்றது*

நெஸ்லே நிறுவனம் அண்மையில் இடம்பெற்ற ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் நிகழ்வில் கொப்பரைத் தேங்காய் உற்பத்திப் பிரிவில் 'அதிக பெறுமதி சேர் ஏற்றுமதியாளர்' என்ற விருதை வென்றுள்ளது. தேசிய ஏற்றுமதிகளுக்கு வலுவான பங்களிப்பை வழங்கி, உள்நாட்டில் தெங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் பண்ணை ஊழியர்களின் வாழ்வாதாரத்தை நிலைபேற்றியல் கொண்டதாக மாற்றியமைக்கும் முயற்சிகளுக்கான இனங்காணல் அங்கீகாரமாக நெஸ்லே நிறுவனம் தற்போது ஆறாவது தடவையாகவும் ஜனாதிபதி ஏற்றுமதி விருதை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகில் மிகப் பாரிய தேங்காய்ப் பால்மா ஏற்றுமதி நிறுவனங்களுள் ஒன்றாக நெஸ்லே லங்கா திகழ்ந்து வருகின்றது. இந்த உற்பத்தி 50 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன், உள்நாட்டில் *Maggi* வர்த்தகநாமத்தின் கீழ் அது விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. குருணாகலிலுள்ள நெஸ்லே நிறுவனத்தின் அதி நவீன தொழிற்சாலையில் இது உற்பத்தி செய்யப்பட்டு வருவதுடன், இதற்காக வருடாந்தம் 80 மில்லியன் வரையான தேங்காய்களை இலங்கையில் கொள்வனவு செய்து வருகின்ற நிறுவனம், தெங்குத்தோட்டச் செய்கையில் ஈடுபட்டுள்ள 6,000 வரையான குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி வருகின்றது.

நெஸ்லே நிறுவனத்தின் விநியோகச் சங்கிலிப் பிரிவின் பிரதித் தலைமை அதிகாரியான ஹொரேசு ரோல்டான் அவர்கள் கூறுகையில்: *"இலங்கை தேங்காய்ப் பால்மாவை ஏற்றுமதி செய்வதில் எமது வெற்றிகரமான தொழிற்பாடுகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ள ஒரு இனங்காணல் அங்கீகாரமாக இந்த விருதை ஏற்றுக்கொள்வதில் மிகுந்த கௌரவம் அடைகின்றோம். 1980 களில் தேங்காய்ப் பால்மா உற்பத்தியில் நாம் முன்னோடியாகச் செயற்பட்டதுடன், அன்றுதொட்டு உள்நாட்டில் தெங்குத் தொழிற்துறை மீது தொடர்ச்சியாக முதலீடுகளை மேற்கொண்டு வந்துள்ளோம். நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளின் பலனாக உலகிலேயே மிகவும் நாடப்படும் ஒரு உற்பத்தியாக இலங்கை தேங்காய்ப் பால்மா மாறியுள்ளதுடன், மிகச் சிறந்த சுவை, அதியுயர் தரம் மற்றும் சுற்றுச்சூழல் மீது குறைந்த அளவிலான தாக்கம் ஆகியவற்றையும் பேணி வருகின்றது,"* என்று குறிப்பிட்டார்.

உலகளாவில் சமையல் கலை வல்லுனர்கள் பல்வேறு வகையான உணவு வகைகளைத் தயாரிப்பதற்கும், சொக்கிலேற்று வகைகள் மற்றும் ஐஸ் கிறீம் போன்ற உலகில் முன்னிலை வகிக்கும் மிட்டாய் உற்பத்திகளின் உற்பத்தி நிறுவனங்களும் நெஸ்லே நிறுவனத்தின் தேங்காய்ப் பால்மாவை உபயோகித்து வருகின்றனர். நாட்டில் தெங்குப் பயிர்ச்செய்கை குன்றி வருகின்றமை காரணமாக தேங்காய்களின் விரயம் தொடர்பில் பெரும் அக்கறை எழுந்துள்ள நிலையில், தேய்காய்ப்பாலை சிக்கனமாக உபயோகிக்கும் வழியை அது நுகர்வோருக்கு வழங்குகின்றது. வீட்டில் தேங்காயை உபயோகிக்கும் போது அதில் 65% ஆன கொப்பரை மட்டுமே பிரித்தெடுக்கப்படுவதாக அதிகார சபைகள் மதிப்பிட்டுள்ளன. அதற்கு நேர்மாறாக, தேங்காய்ப் பால்மாவில் 85% வரை தேங்காய்க் கொப்பரை உபயோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

தெங்குப் பயிர்ச்செய்கை மற்றும் கிராமப்புற வாழ்வாதாரங்களைத் தக்கவைக்க உதவுவதற்காக, தெங்கு அபிவிருத்திச் சபையுடன் இணைந்து 2016 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் Nestlé Coconut Plan என்ற ஒரு தெங்கு அபிவிருத்தித் திட்டத்தை நெஸ்லே நிறுவனம் ஆரம்பித்திருந்தது. அதிக அறுவடையை ஈட்டித்தருகின்ற 10,000 தென்னங்கன்றுகள் தெங்குச் செய்கையில் ஈடுபடும் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், முழுமையான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மிகச் சிறந்த நடைமுறைகளின் ஒப்பீட்டு நியமமாக மாதிரிப் பண்ணைகள் போன்ற முயற்சிகள் இதன் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. தெங்கு முக்கோணப் பிரதேசத்திலும், அதற்கு வெளியில் வெற்றிகரமாக தெங்குப் பயிர்ச்செய்கையை முன்னெடுக்க அதிக வாய்ப்புள்ளது என இனங்காணப்பட்ட

பிரதேசங்களிலும் வர்த்தகரீதியான மற்றும் வீட்டுத் தோட்ட தெங்குச் செய்கையாளர்கள் மத்தியில் தெங்குப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

உள்நாட்டிலும், ஏற்றுமதிச் சந்தைகளிலும் அதிக வளர்ச்சிவாய்ப்புக்களைக் கருத்தில் கொண்டு, அதிகரித்து வருகின்ற கேள்வியை ஈடுசெய்யும் வகையில் தேங்காய்ப் பால்மா உற்பத்தி அளவை மேம்படுத்தும் முகமாக அண்மையில் கணிசமான முதலீட்டு நடவடிக்கையை நெஸ்லே நிறுவனம் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில்: *"ஒரு நிறுவனம் என்ற வகையில் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதும், ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு பங்களிப்பாற்றுவதுமே எமது நோக்கமாக உள்ளதென நாம் நம்புகின்றோம். ஏற்றுமதியில் எமது காத்திரமான பெறுபேறுகளுக்கும், எமது பண்ணையாளர்கள், அவர்களுடைய குடும்பத்தினர் மற்றும் பணியாளர்களின் வாழ்வில் மாற்றத்தை நிகழ்விக்கும் செயற்திட்டங்கள் மீது முதலீடுகளை மேற்கொண்டு வருகின்ற எமது பணிக்கும் கிடைக்கப்பெற்றுள்ள இனங்காணல் அங்கீகாரத்தினால் நாம் மிகுந்த கௌரவமும், பெருமையும் அடைந்துள்ளோம். அவர்களுக்கு உதவுவதன் மூலமாக வலுவான சமூகங்களை நாம் கட்டியெழுப்பி, அதன் மூலமாக தொழிற்துறையின் நீண்ட கால இருப்பினை உறுதிசெய்வதற்கு உதவ முடியும்,"* என்று குறிப்பிட்டார்.

உள்நாட்டு ஏற்றுமதித்துறையில் கணிசமான பங்களிப்பை ஆற்றி வருகின்ற நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற இனங்காணல் அங்கீகாரமாக ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் என்ற வருடாந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் அது ஒழுங்குப்படுத்தப்படுகின்றது. இதற்கு முன்னர் 2010 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் 'தேங்காய் மற்றும் தேங்காயை மூலமாகக் கொண்ட உற்பத்தித் துறையில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்', 2011 ஆம் ஆண்டில் 'உணவு மற்றும் பான வகை உற்பத்திப் பிரிவில் மிகச் சிறந்த ஏற்றுமதியாளர்', மற்றும் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் 'ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள மிகச் சிறந்த பல்தேசிய நிறுவனம்' ஆகிய விருதுகளையும் நெஸ்லே வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.